22. எதிர்ப்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
23. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு
24. தணிப்பு நடவடிக்கைகள்
25. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் ஒலி சூழல் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
26. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் நீர் சூழல் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
27. சாலைகளில் நீர் தெளித்தல்
28. பசுமை அரண் அமைத்தல்
29. தொழில்நுட்பம் மற்றும் தளம்
30. திட்ட நன்மைகள்
31. முடிவுரை

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியினை பதிவு செய்துவிட்டு அதன்படி இத்திட்டம் குறித்த கருத்துகளை தெரிவிக்குமாறு கூறினார்.

1. திரு. பார்த்திபன், சிவாயம் :

தனது பெயர் பார்த்திபன் என்றும், சிவாயம் வடக்கு கிராமத்தை சார்ந்தவன் என்றும், MA பட்டதாரி என்றும் கூறி தனது வணக்கத்தை தெரிவித்தார். குவாரி அமைவதினால் எந்த பிரச்சனை இல்லை என்றும், நேரடியாகவும், மறைமுகமாகவும் அதிக வேலைவாய்ப்புகளை வாங்கி கொடுக்கிறார்கள் என்றும் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் மற்றும் அதனை சார்ந்த பொது சேவைகள் செய்திருக்கிறார்கள் என்றும் கூறினார். மேலும் குவாரி அமைந்தால் அதிக உதவிகள் கிடைக்கப்பெறும் என்றும் கூறி தனது உரையை முடித்தார்.

2. திரு. R. பிரகாஷ், ஐய்யர்மலை :

இவர் தனது வணக்கத்தை கூறிவிட்டு இக்குவாரி அமைந்தால் நிறைய வேலைவாய்ப்பு கிடைக்கும். வேலைக்கு செல்லவேண்டும் என்றால் கரூர், திருச்சி செல்ல வேண்டும் என்று கூறினார். மேலும் எம்–சேன்ட்யை குறைந்த விலைக்கு எடுக்கலாம். இக்குவாரியினால் மக்களுக்கு நிறைய நன்மைகள் உண்டு என்று கூறி தன் உரையை முடித்தார்.

3. திரு. பாக்கியம், ஐய்யர்மலை :

குவாரி அமைவதினால் தனக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதாகவும், குறைந்த விலைக்கு எல்லா பொருட்களும் கிடைக்கும் என்றும், மக்களுக்கு நிறைய நன்மையை செய்கிறார்கள் என்றும் அதனால் குவாரிக்கு தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்தார்.

4. திரு. ஈஸ்வரி, சிவாயம்:

தனக்கு குடும்பத்தில் உள்ள அனைவரும் லாரி ஓட்டுபவர்கள் என்றும், இந்த குவாரியினால் உள்ளூரிலேயே அவர்கள் இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

5. திரு. ஜோதி, அய்யர்மலை :

எங்களுக்கு எல்லா வாய்ப்பையும் உதவிகளையும் செய்கிறார்கள் என்று தெரிவித்தார்.

6. திரு.வேல்முருகன், சிவாயம் :

இக்குவாரியானது வரவேற்கத்தக்க ஒன்று என்றும், மேலும் வேலைவாய்ப்பு மட்டுமல்ல வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு காப்பீடு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறிவிட்டு தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

7. திரு. மகேந்திரன், அய்யர்மலை :

வருகை தந்துள்ள அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் தனது வணக்கத்தை தெரிவித்தார். தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறி பின்பு இந்த நிறுவனம் அனைத்து சட்டதிட்டங்களை பின்பற்றுகிறார்கள் என்றும், இக்குவாரியினால் அருகிலுள்ள 50 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்

என்றும் கூறினார். மேலும் இந்நிறுவனத்தின் மூலம் விலை குறைவாக மணலை தங்களால் பெற்றுக் கொள்ள முடிகிறது. குவாரியினை சுற்றியுள்ள சாலை ஓரங்களில் மரம் நட்டு பாராமரித்து வருகிறார்கள் என்றும் மற்றும் பள்ளிகளுக்கு CCTV Camera கருவியை பொருத்தியுள்ளார்கள் என்றும் கூறினார். மேலும் குவாரியை சுற்றியுள்ள பகுதியிலுள்ள படித்தவர்களை ஊக்குவிக்கிறார்கள் என்றும், தாரளமாக அனுமதி தரலாம் என்றும் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

8. திரு. சதிஷ், இரும்பூதிபட்டி :

வணக்கம். இக்குவாரியினால் எந்த பிரச்சனையும் இல்லை. வீடு கட்டுவதற்கு திருச்சியிலிருந்து மணல் எடுத்து வரவேண்டும். ஆனால் இக்குவாரியினால் குறைவான விலையில் கிடைக்கிறது என்றும், அதனால் எந்த பாதிப்பும் இல்லை என்றும், மக்களுக்கு எந்த பாதிப்பு இல்லை என்று கூறினார். மேலும், லாரிகளில் மண்ணை ஏற்றி செல்லும்போது மணலை தார்பாய் மூடி கொண்டு போகும்படி கேட்டுக்கொண்டார்.

9. திரு.பூபதி, அய்யர்மலை :

அனைவருக்கும் வணக்கம். எங்கள் ஊருக்கு அதிக நலத்திட்ட உதவிகளை செய்கிறார்கள். அன்னதானம் பள்ளிகளுக்கும் தேவையான உதவிகள் செய்திருக்கிறார்கள். அதனால் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

10. திரு.பன்னீர்செல்வம், சரவணபுரம் :

குவாரியினால் தனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றும், நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு தருகிறார்கள் என்று கூறினார். கோவில் கட்டுமான பணிகளுக்கு மணல் அளிக்கிறார்கள் என்று கூறினார். அதனால் தனக்கு குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

11. திரு.சிவக்குமார், கோட்டைமேடு :

அரசு அலுவலகர்கள் மற்றும் அனைவருக்கும் தனது வணக்கத்தை தெரிவித்தார். இந்த குவாரியை சுற்றி அதிக மரங்களை இவர்கள் நட்டுள்ளனர். அதனால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று கூறினார். பின்பு அருகிலுள்ள கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

12. திரு.பிரவின், சிவாயம் :

அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவித்தார். இந்த குவாரி அமைந்தால் கட்டுமான பொருட்கள் மிக குறைந்த விலையில் ஏழைகளுக்கும் கிடைக்கும் அவர்கள் பயனடைவார்கள் என்றும், தனக்கு எந்த ஆட்சேபனை இல்லை என்றும் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

13. திரு.விஜயன், காவேரி ஆறு பாதுகாப்பு இயக்கம், கரூர் :

கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் மாவட்ட வருவாய் அலுவலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பொறியாளர், காவல்துறை, பொதுமக்கள், சமூக ஆர்வலர் என அனைவருக்கும் தனது வணக்கத்தினை தெரிவித்தார். குவாரியின் அருகிலேயே புகழ்பெற்ற ரத்தினகிரீஸ்வரர் ஆலயம் உள்ளது. சிவாயம் கிராமத்தில் பழைய சிவன் கோவில் உள்ளது. கூட்டுக் குடிநீர் திட்டம் சாலையோரம் உள்ளது.

பள்ளிக்கூடம் மற்றும் அரசு கல்லூரி அருகிலேயே உள்ளது என்று கூறினார். இவைகள் குவாரி அமைவதினால் பாதிப்படையும். மேலும் சுற்றுச்சூழல் மாசுபடும் என்று தெரிவித்தார். எனவே குவாரிக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**14. <u>திரு.சண்முகம், சட்ட விரோத கல்குவாரி எதிர்ப்பு இயக்கம், கரூர் :</u>**

கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், காவல்துறை, பொதுமக்கள் சமூக ஆர்வலர் என அனைவருக்கும் தனது வணக்கத்தினை தெரிவித்தார். ஒரு குவாரி அமைந்தால் எவ்வளவு சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும். அப்பாதிப்பு எவ்வாறு நிவர்த்தி செய்யப்படும் என்பதற்கான கருத்துக்கேட்பு கூட்டம்தான் நடைபெறுகிறது என்று கூறினார். சிறுகனிம விதி 1959–ன்படி தான் குவாரி இயக்கமுடியும் என்றும், நவமணி மைன்ஸ் கல்குவாரியானது 2ஹெக்டர் பரப்பளவில்தான் அமையப்பட்டுள்ளது. குவாரியின் 300 மீட்டர் சுற்றளவில் அங்கீகரிப்பப்பட்ட வீட்டுமனைகள் இருக்கக்கூடாது. ஆனால் 200 மீட்டர் சுற்றளவில் புல எண். 4 மற்றும் 5–ல் வீட்டுமனைகள் உள்ளது. இவை புல வரைபடத்திலும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. மேலும் 300 மீட்டர் சுற்றளவில் நிறைய வீடுகளும், மேற்கு புறம் பசுமை வீடுகளும் உள்ளது. இவை புல வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது. இது விதிமீறலாகும். அதனால் இக்குவாரிக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று கூறினார்.

இக்குவாரியின் நடுப்பகுதியில் வண்டிபாதை உள்ளது. இது SEIAA–யில் திட்ட அறிக்கையிலும் காட்டப்பட்டுள்ளது. வண்டிபாதை இருந்தாலே 10 மீட்டர் தள்ளிதான் குவாரி பணி செய்யவேண்டும். ஆனால் இங்கு அருகிலேயே உள்ளது. அதனால் இந்த குவாரியானது அனுமதி பெறுவதற்கு தகுதியற்றது என்று கூறினார்.

இக்குவாரியை சுற்றி 84 சதவீதம் விவசாய பூமி உள்ளது. இதனால் விவசாயம் பாதிக்கப்படும். 300 மிட்டர் சுற்றளவில் இரத்தினகிரீஸ்வரர் கோவில் உள்ளது. மேலும் குவாரயை சுற்றி, நீர்நிலைகள், குளங்கள் மற்றும் நீர்தேக்கதொட்டிகள் உள்ளது. மேலும் இரத்தினகிரீஷ்வரர் கோவிலில் Rope Car திட்டம் வரப்போகிறது என்றும், குவாரிக்கு வெடி வைக்கும்போது இவையனைத்தும் பாதிப்படையும் என்றும் கூறினார்.

இக்குவாரியை சுற்றி பசுமை அரண் அமைக்கவில்லை. கம்பிவேலி அமைக்கப்படவில்லை. இந்த குவாரிக்கு மட்டுமல்லாமல் எல்லா குவாரிகளும் இப்படித்தான் இருக்கின்றன என்றும் கூறினார். இந்த தவறுகளினால் சுற்றுச்சூழலுக்கு அதிகமாக பாதிப்பு ஏற்படும். குழந்தைகள் குவாரி உள்ளே தவறுதலாக விழுந்து இறக்க வாய்ப்பு இருக்கிறது என்றும், குவாரி பணிக்கு முன்னாடியே தடுப்பு வேலி அமைக்கப்படவேண்டும். ஆனால் இங்கு அமைக்கப்படவில்லை என்று கூறினார். இங்கு ஒரு குவாரிக்குதான் அனுமதி உண்டு. ஆனால் ஆய்வின்போது அனுமதி முடிந்த குவாரிகளும் இயக்கத்தில் உள்ளது என்றும் கூறினார். இவ்வாறு விதிமீறல்கள் கொண்ட இந்த கல் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என்பதை வலியுறுத்தி தனது உரையை முடித்துக் கொண்டார்.

15. திரு.முகிலன், ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், கரூர்:

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் பல்வேறு துறை அதிகாரிகளுக்கும், கல்குவாரி உரிமையாளர்களுக்கும், கல்குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்களுக்கும், மனுக்கொடுக்க வந்திருக்கும் சமூக செயல்பாட்டாளர்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் மற்றும் பத்திரிக்கை நண்பர்களுக்கும் தனது வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன் என்றார்.

மதுரை மாவட்டத்தில் கிரானைட் முறைகேடு தொடர்பான ஆய்வுக் குழுவில் 13 மாதங்கள் இணைந்து, ஒரு லட்சத்து பதினோராயிரம் கோடி மதிப்பிலான ஊழலை கணக்கிட்ட ஆய்வுக் குழுவில் தானும் இணைந்து பணியாற்றினேன். தொடர்ந்து மண்ணையும், மக்களையும் பாதுகாக்க பாடுபடுவேன் என்றும் கூறினார். கருத்துக்கேட்பு கூட்டத்தின் சுவரொட்டிகள் சிவாயம் வடக்கு ஊராட்சி ஒன்றியத்தில் மட்டுமே காண முடிந்தது என்றும், அய்யர்மலையிலோ, அதனை சுற்றியுள்ள பகுதியிலோ சுவரொட்டிகளை காண முடியவில்லை என்றும் மற்றும் கிராம நிர்வாக அலுவலகத்தில் மட்டுமே சுவரொட்டிகள் இருந்தது என்றும் கூறினார். எனவே 100 சுவரொட்டிகள் மேல் அடித்மது குவாரியினால் பாதிக்கக்கூடிய பகுதிகள் மட்டும் இல்லாமல் அதனை சுற்றியுள்ள 10 கிலோமீட்டர் சுற்றளவிற்கு ஒட்டுமாறு கேட்டுக் கொண்டார்.

எனவே மக்கள் எல்லோரும் தெரிந்துக் கொண்டு அவர்கள் தங்களுடைய கருத்துக்களை ஜனநாயக முறைப்படி, ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுங்கள் என்று வலியுறுத்தினார். இரண்டு லட்சங்கள் செலவலித்து தமிழ்நாடு முழுவதும் செய்திதாள்களில் விளம்பரம் செய்கிறீர்கள். ஆனால் உள்ளூர் மக்களுக்கு இங்கு கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறுவது தெரியவில்லை. எனவே அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தி தருமாறு வலியுறுத்தி, எடுத்துக்காட்டாக மதுரை மாவட்ட ஆட்சியரை கூறினார்.

EIA அறிக்கையில் இணைப்புகள் ஏதும் இல்லை என்றும், 40 வகையான ஆவணங்கள் இணைக்கவேண்டும் என்றும் கூறினார். ஆனால் 15 வகையான ஆவணங்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது என்று கூறினார். பின்னர் கிராம வரைபடம் இல்லை என்பதையும் கூறினார்.

கிராம நிர்வாக அலுவலரிடம் கிராம வரைபடம் கேட்டால், சிவாயம் வடக்கு கிராமத்திற்கு கிராம வரைபடமே இல்லை என்று கூறுகிறார். பின்னர் எவ்வாறு கிராமம் பற்றி விபரம் தெரிந்துக் கொள்ள முடியும்? என்ற கேள்வியை எழுப்பினார். இது வெளிப்படையாக நடக்கவேண்டிய கருத்துக்கேட்பு கூட்டம். இக்குவாரி வந்தால் நீர் மாசுபடும். மண் மாசுபடும். ஒலி மாசுபடும். சமூக பொருளாதாரம் பாதிப்படையும் என்று திட்ட அதிகாரியே கூறினார். பின்னர் இந்த திட்ட அறிக்கையில் கிராம வரைபடமே இல்லை என்றால் எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும். எனில்

குவாரி பற்றி உண்மையான விவரங்களை எங்கே தெரிந்து கொள்வது என்ற கேள்வியை எழுப்பினார்.

மேலும், இவ்வறிக்கையில் கிராம நிர்வாக அலுவலரின் சான்று, வட்டாட்சியர், கோட்டாட்சியர், யனு ஆறைநேள அவர்களின் புலத்தணிக்கை எதுவும் இணைக்கப்படவில்லை என்றும் கூறினார். அண்டைய புலத்தின் செயல்முறை ஆணை இணைக்கப்படவில்லை. இக்குவாரியின் அருகில் புல எண்கள்.13,14,30,31 மற்றும் 212–ல் குவாரிகள் அமைந்துள்ளது. அந்த குவாரிகளின் செயல்முறை ஆணை இணைக்கப்படவில்லை. எனில் எந்த விதியின் அடிப்படையில் இந்த குவாரி இயங்கும் என்பதை அறிந்துக் கொள்ள முடியும் என்பது தெரியவில்லை என்று கூறினார். வருங்காலத்தில் இப்படியான அனைத்து ஆவணங்களையும் இணைக்கும்படி மாவட்ட நிர்வாகத்திடமும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரிடமும் கேட்டுக் கொண்டார்.

மேலும், நவமணி மைன்ஸ் ப்ளூ மெட்டல்ஸ் பிரச்சனைக்குள்ளானது. கடந்த மாதம் ஒருவர் இறந்துவிட்டார். அது எப்படி என்று தெரியவில்லை என்றும், சட்டமன்ற உறுப்பினர் குவாரியில் உள்ளே அமர்ந்து கொண்டார் என்றும், குவாரியை சுற்றியும் மதில் சுவர் மற்றும் உள்ளே யாரையும் அனுமதிக்கவில்லை என்றும், கூறிவிட்டு எங்களுக்கு முழுமையான உண்மையை தெரிந்துக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று மாவட்ட நிர்வாக அலுவலரிடம் கேட்டுக் கொண்டார்.

முதலில் மணி என்பவர் இக்குவாரிக்கு அனுமதி கேட்டு, இன்று சட்டமன்ற உறுப்பினர் மகன் திரு.பழனியாண்டி மகன் விமலாதித்தன் பெயரில் அனுமதி கேட்டுள்ளார்கள். எனவே இது சட்டமன்ற உறுப்பினர் குவாரியாகும் என்று கூறினார். இதற்கு முன்னதாகவே சட்டமன்ற உறுப்பினர், புல எண்.2/2–ல் குவாரியின் அனுமதி 2019–ல் முடிந்துவிட்டது. ஆனால் இன்றும் அது இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனை பசுமை தீர்ப்பாயம் ஆணையின் பெயரில் SEIAA மற்றும் TNPCB இணைந்து ஆய்வுசெய்து பல கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளது என்றும் கூறினார். எனில், அதிகாரத்தில் இருப்பவர்கள் குவாரி தொழிலுக்கு வரும்போது அனைத்து வகையான ஆவணங்களும் மக்களுக்கு தெரியவேண்டும் இல்லையா? என்று கேள்வி எழுப்பினார். பின்னர் சட்டமன்ற உறுப்பினருக்கு ஆதரவாக கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறுகிறதா என்றும், அதற்காக இந்த ஆவணங்கள் அனைத்தும் மறைக்கப்பட்டிருக்கிறதா என்றும் கேள்வியை எழுப்பினார். எனவே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அவரது குடும்பத்திற்காக இந்த ஆவணங்கள் அனைத்துமே மறைக்கப்பட்டிருக்கிறது என்ற நேரடியான தனது குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இந்த குவாரியை பொறுத்தவரை பேசியவர்கள் காற்று மாசுபாடு வராது, நீர் மாசுபாடு வராது, ஒலி மாசுபாடு வராது. அதனால் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என்று கூறியிருந்தால்

பரவாயில்லை. 50 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறியது உண்மைதான். ஆனால் உள்ளூர் வேலையாட்கள் 10 பேர் மட்டும்தான். ஏனெனில் கடந்த மாதம் வட மாநிலத்தவர் இறந்தால் யாரும் வரமாட்டார்கள் என்று கூறினார். பின்பு, வெடி வைக்க வேண்டும் என்றால் ராஞ்சியில் சென்று பயிற்சி பெற்றவர்கள் தான் வெடி வைக்கவேண்டும். எனவே, பயிற்சி பெற்ற வேலையாட்கள்தான் இருக்கமுடியும் என்றார். பயிற்சி இல்லாமல் மற்றும் பயிற்சி பெறாமல் 10 பேர் லாரி ஓட்டுநர்களாக பணிபுரியலாம் என்று கூறினார்.

சிறுகனிம விதிகள்–1959 என்ற புத்தகத்தில் விதி 36(1) –ல் தெளிவாக சொல்கிறது. இவற்றில், ஒரு குவாரி அமைவதற்கு அடிப்படைவிதிகள் என்று இருக்கிறது. அந்த விதியின் அடிப்படையில் குவாரி அமையும் புலத்திலிருந்து 300 மீட்டர் தூரத்தில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகளோ, வீட்டுமனைகளோ இருக்கக்கூடாது. வருவாய்துறை ஆவணங்களான புல வரைபடம், அ–பதிவேடு, கிராம வரைபடம் மற்றும் ஊராட்சி மன்றத்தினுடைய வரி செலுத்தப்பட்ட வீடுகள், DTCP அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் ஏதேனும் ஒன்று இருந்தால் கூட குவாரி அமையக்கூடாது என்பதுதான் சட்டம் என்று கூறினார்.

மேலும், இந்த சட்டம் தெளிவாக சொல்கிறது. இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டம், மானோடு என்ற இடத்தில் 2014 –ல் ஒரு குவாரி அனுமதி முடிந்தது. அதற்கு பின்னர் Approval கேட்டார்கள். மக்கள் போராடினார்கள். அதற்கு பின்னர் அனுமதி கொடுக்கவில்லை. அந்த குவாரி ஒட்டி 300 மீட்டர் தூரத்தில் அரசு கலைக்கல்லூரி 11 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு திட்டம் போட்டு 6 கோடி ரூபாய் செலவில் கட்டிட பணி முடிந்த பின்னர் அந்த குவாரி உரிமையாளர் வழக்கு தொடர்ந்தார். இப்பொழுது அந்த கல்லூரி கட்டிட வேலை நிறுத்தப்பட்டது. அந்த குவாரி உரிமையாளர் வேறு ஒருவருக்கு 9 ஏக்கர் கொடுக்கிறேன் என்று கொடுத்து, அங்கே திருநெல்வேலியில் பிரச்சனையாக மாறி மக்கள் அங்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றார். அதாவது கல்குவாரி இருக்கும் இடத்தில் வீடு கட்ட கூடாது. பட்டா நிலம் அமைந்து இருக்கலாம். என்ன வேனாலும் இருக்கலாம். ஆனால் வீடு கட்ட கூடாது. இதுதான் சட்டம். ஆகையால், அரசு கலைக்கல்லூரி கட்டிடம் கட்டியதையே இன்றைக்கு அந்த கட்டுமானம் 6 கோடி கட்டுமானம் செய்யப்பட்டது குவாரியினால் நிறுத்தப்பட்டுள்ளது. அப்படி இருக்கும்போது, இந்த குவாரி புல எண்.15 கல்குவாரி என்பது பல ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு முறை வெட்டப்பட்டுள்ளது. 7 ஏக்கர் நிலத்தில் இரண்டு முறை குவாரி பணி மேற்கொள்ளப்பட்டு, 2 மீட்டர் ஆழம் வரை வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. மேலும், 38 மீட்டர் ஆழத்தில் அந்த குவாரி அமைக்கப் போறோம் என்று சொல்கிறார்கள் என்று கூறினார்.

மேலும், இந்த 300 மீட்டரில் அவர்களுடைய ஆவணப்பதிவு என்னவென்றால் எந்த வீடும், வீட்டுமனையும் இல்லை. அந்த பதிவு ஆவணத்தில் புல எண்.6 –ல் 200 மீட்டர் தூரத்தில்

சண்முகாபுரம் என்ற DTCP Approval No.347/2019 Approval வாங்கிய Site அமைந்துள்ளது. அப்போ 2018 –லேயே DTCP –யினால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகள் அமைந்துள்ளது. அப்படிப்பட்ட இடத்தில் ஒரு குவாரியை அமைப்பதற்கு VAO, தாசில்தார் மற்றும் AD Mines சட்டத்திற்கு விரோதமாக, அவர்கள் வகிக்கும் பொறுப்புகளுக்கு விரோதமாக, இந்த குவாரியை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர். இன்றைக்கு உங்களை வேறு கூட்டிக்கொண்டு வந்து உக்காரவைத்திருக்கிறார்கள். இது எவ்வளவு மோசமான இழிச்செயல் என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். இது யாரை ஏமாற்றுவது, மக்களை ஏமாற்றுவதா? அரசை ஏமாற்றுவதா? சமூகத்தை ஏமாற்றுவதா? என்ற வினவினார். இது எவ்வளவு மோசமான இழிச்செயல்? இதை எந்த நடைமுறையில் பார்க்க வேண்டியிருக்கிறது என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மேலும், அவர் கூறுகையில் அரசு அதிகாரிகளே பித்தலாட்டமாக இருந்தால், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்காக, அவர் குடும்பத்துக்காக பித்தலாட்டம் செய்ய முடியும் என்றால், இந்த நாடு எங்க போய் முடியும். அன்றைக்கு எல்லாம் எதை வேண்டுமானாலும் செய்து கல்குவாரி நடத்தினார்கள். ஏனென்றால், அன்றைக்கு எந்தவிதமான ஆய்வும் கிடையாது. எதிர்ப்பும் கிடையாது. ஏனென்றால் கல்குவாரியிலிருந்து கட்டிடங்கள் கட்டுவதற்காக, சாலைகள் அமைக்க கற்களை வெட்டி பயன்படுத்தினார்கள். ஆனால் 2017 –ல் மணல் கொள்ளை எதிர்ப்பு போராட்டம், காவிரி ஆறு பாதுகாப்பு குறித்து நடைபெற்ற உச்சநீதிமன்றம் வழக்கில் ஆற்றில் மணல் அள்ளுவதை நிறுத்த உத்தரவிடப்பட்டது. M-sand தயாரிப்பு காரணமாக கல்குவாரியின் செயல்பாடு உச்சபட்சமாக சட்டவிரோதமாக செயல்படுவதை பார்க்க முடிகிறது. அந்த குவாரியினால் பிரச்சனை வரும் என்பது அந்த உள்ளூர் வட்டாச்சியருக்கு தெரியாதா? கோட்டாட்சியருக்கு தெரியாதா? VAO –க்கு தெரியாதா? AD Mines–க்கு தெரியாதா? அதனால்தான் அவர்கள் அறிக்கையை வெளியிட சொல்கிறோம். அவர்கள் அறிக்கை எல்லாம் இதில் எதுவுமே இல்லை. கம்பெனிகாரர்கள் கொடுத்த அறிக்கை மட்டும்தான் இதில் இருக்கிறது. 300 மீட்டர் தூரத்தில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகளும் இல்லை. வீட்டுமனைகளும் இல்லை. ஆனால் உண்மையிலேயே இது எல்லாம் அங்கே இருக்கிறது. அப்போ எங்களிடம் இருந்ததனால் இதை எல்லாம் பார்த்து, தெரிந்து, எடுத்து கொடுக்க சௌகரியமாக இருந்தது. இல்லையென்றால் எப்படி? என்று கேள்வி கேட்டார். ஆகையால் அங்கீகரிக்கப்பட்ட பல வீட்டுமனைகள், 40–க்கும் மேற்பட்ட வீட்டுகள் இருப்பதால் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது, கொடுக்கவும் கூடாது. கொடுத்தாலும் சட்ட விரோதம். அனுமதி வழங்கினால் நீதிமன்றம் செல்ல நேரிடும்.

மேலும் அவர் கூறுகையில், அடுத்ததாக 300 மீட்டர் தூரத்திற்குள் வீடுகள் இருக்கக்கூடாது. அப்போ, இந்த குவாரி புல எண்.15 அதனுடைய கிழக்குபுற பகுதியிலேயே புல எண்.6 –னுடைய வடக்கு பகுதிகளில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. அதேபோல புல எண்.29, தெற்கு பகுதியில் வீடுகள் உள்ளது. அதேபோல புல எண்.241 –ல் வீடுகள் இருக்கிறது. அப்போ இவ்வளவு வீடுகள் இருக்கும்போது, இந்த வீடுகளை காட்டாமல், முழுதாக மறைத்து அறிக்கை கொடுத்துள்ளார்கள் என்றார். இது அரசு அறிவித்த ஆவணம் FMB. இந்த புல எண்.6–ல் இந்த Site போட்டதில் இருந்து பார்த்தீர்களேயானால், பல இடங்களில் வீடு இருப்பதை காட்டுகிறது. இது போன்ற நிலைதான் இருக்கிறது என்றார்.

எனவே அங்கீகரிக்கப்பட்ட பல வீடுகள் இருப்பதால், இந்த குவாரிக்கு அனுமதி தரமுடியாது. அடுத்தப்படியாக, சிறுகனிம விதிகள் 36(1) தெளிவாக சொல்லுகிறது உள்ளாட்சி மன்றங்கள், அல்லது மத்திய, மாநில அரசு அல்லது குடிநீர் வடிகால் வாரியம் இவை அனைத்தினுடைய முதன்மை பணியில் ஒன்றில் ஏதாவது ஒன்று, நீர் ஏற்றும் அமைப்புகள், நீர் வளர்ச்சி ஏற்பாடு, பாலம் ஆகியவை 500 மீட்டர் சுற்றுவட்டார பகுதியில் அமைந்திருந்தால் சிறுகனிமம் எதுவும் வெட்டி எடுக்கக்கூடாது. புல எண்.15 –ல் இந்த குவாரி இருக்கிறது. புல எண்.15 –க்கு கிழபுறம், மேற்கு கிழமுகமாக புல எண்.17 இருக்கிறது. அந்த கிழபுலப் பகுதியில் அய்யர்மலைக்கு மேற்கு பகுதியில், சாலைக்கு கிழக்கு புறமாக, மேல்நிலை நீர் தேக்க தொட்டி இருக்கிறது. அப்போ, இதே 500 மீட்டர் தூரத்திற்குள் மேல்நிலை நீர்தேக்க தொட்டி இருக்கிறது. இதை பற்றி யாரும் கணக்கு சொல்லவில்லை. அது மட்டுமல்ல இந்த குவாரியின் தென்புறம் புல எண்.17 –ல் ஏற்கனவே அரசு ஆழ்துறை கிணறு போட்டு வைத்திருக்கிறார்கள். அது ரோட்டில் இருந்து பார்த்தாலே தெரிந்துக் கொள்ளமுடியும். அப்போ 500 மீட்டர் தூரத்திற்க்குள்ளேயே மேல்நிலை நீர்தேக்க தொட்டி, நீர் ஏற்றும் நிலையம் இவைகள் எல்லாம் இருக்கிறது. அப்படி இருக்கும் போது இந்த குவாரிக்கு அனுமதி தர முடியாது என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், ஒரு குவாரி அமையும்போது, அழகாய் சொல்கிறார்கள். குவாரிக்கு உள்ளே பாதைகள் இருந்தால் அதற்கு அனுமதி தரக்கூடாது என சொல்கிறார்கள். இதே அந்த குவாரி நிறுவனம் வெளியிட்டிருக்கக்கூடிய அறிக்கை, தமிழில் இருக்கக்கூடிய சுருக்கறிக்கை இது என்று காண்பித்தார். தமிழில் இருக்கக்கூடிய சுருக்கறிக்கை பக்கம் 7–ல் இருக்கக்கூடிய இந்த படத்தை திட்டத்தளத்தின் செயற்கைக்கோள் புகைப்படம் B1 என காட்டியிருக்கிறார்கள். இதில் குவாரி இருக்கக்கூடிய, புல.எண்.13, 14 இரண்டுக்கும் நடுவில் தான் இந்த நடைபாதை நாங்கள் Approach ரோடாக பயன்படுத்தப்போகிறோம் என நாங்கள் சொல்லவில்லை குவாரியின் உரிமையாளர் சொல்கிறார்கள். குவாரியின் நடுப்பகுதியில் இப்படி தடம் போகிறது. அப்போ ஓர் தடம் இருந்தால் வண்டித்தடம் அல்லது கால்பாதை இருந்தா

அதற்கு 10 மீட்டர் இடைவெளி விட்டுதான் குவாரிக்கு பணி செய்யவேண்டும். அதாவது 35 அடி தடம் விட வேண்டும். ஆனால் இது எதுவுமே இல்லை என்று கூறினார். இது அவர்கள் காட்டின படம். அதேபோல, புல எண்.15 இந்த டோப்போ ஸ்கெச்சில காட்டுகிறார்கள். புல எண்.12 –க்கு தென்புறமாக, புல எண்.18–ல் பார்த்தீர்களேயானால் இப்படி ஓடை வரும். ஆனால் இந்த ஓடை காட்டப்படவில்லை என்றார். நான் ஏற்கனவே பலமுறை கூறியிருக்கிறேன். இங்கே சட்டவிரோதமாக பல குவாரிகளில் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த ஓடை புல எண்.18 –க்கு வருகிறது என்றால், அது புல எண்.15–லும் காட்டப்பட வேண்டும். ஆனால் காட்டப்படவில்லை, இப்பொழுது என்னவென்றால் எங்களுக்கு VAO கொடுக்கக்கூடிய FMB, அதே போல VAO கொடுக்கக்கூடிய Village Map, இது எல்லாம் இருக்கிறது. ஆனால் அது எல்லாம் எங்களுக்கு தெரியாது, அப்போ, ஓடை வருவதை மறைத்து காட்டி, இந்த குவாரிக்கு வந்து அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இது Google Map–ல் தெரிகிறது. இந்த குவாரிக்கு வந்து கொடுத்திருக்கக்கூடிய Google Map ரிபோர்டில் காட்டின பதிவுகள் இருக்கிறது. அப்போ, பாதை இருப்பதை மறைக்கிறார்கள், ஓடை இருப்பதை மறைக்கிறார்கள், வீடு இருப்பதை மறைக்கிறார்கள், வீட்டுமனைகள் இருப்பதை மறைக்கிறார்கள். இப்படி எல்லாவற்றையும் மறைத்துவிட்டுதான் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கின்ற நிலை நீடிக்கிறது. இது மிகவும் மாவட்டத்திற்கு அவமானமான நிலை. ஏனென்றால், அதிகாரிகளே இப்படி ஆவணங்களை மறைத்து கொடுத்தால் நாங்க யாரிடம் சென்று புகார் செய்வது? என்ற கேள்வியை கேட்டார். இப்படி சட்ட விரோதமாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவருடைய மகனுடைய பெயரில் குவாரியை இயக்குவதற்கு இப்படி அவசர அவசரமாக கருத்துக்கேட்பு கூட்டம் நடக்கிறது. இருந்தால், இந்த வாய்ப்பு எல்லாம் அதிகார பொறுப்பில் இருக்கும், சட்டமன்ற உறுப்பினராக இருப்பதனால், இப்படி செய்வதா என்ற கேள்வியை உங்கள் முன் வைக்கிறேன் என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், எங்க பெயரை எல்லாம் சொல்லித்தான் மரியாதைக்குரிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இங்கே கரூர் மாவட்டத்தில் தேர்தல் பரப்புரைக்கு வந்தபொழுது, முகிலன் போன்றோர்களெல்லாம் மணல் கொள்ளையை எதிர்த்து போராடுகிறார்கள், அதனால் அவர்கள் பொய்வழக்கிற்கு ஆளாகிறார்கள், சிறை தண்டனை அடைகிறார்கள் என்று முரசொலியில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது என்று கூறியதாக முரசொலி செய்தித்தாளை காண்பித்தார். அப்படி கூறிதான் கரூரில் ஓட்டு கேட்கின்றனர். அமைச்சர் விஜயபாஸ்கர் சட்டவிரோதமாக கல்குவாரி நடத்துகிறார் என்று நான் சொல்லவில்லை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறினார். மணல் குவாரியெல்லாம் மூடப்பட்டதால் பினாமிபேரில் பலகுவாரிகளை எடுத்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார் என திரு. விஜயபாஸ்கர் அவர்களை கூறினார். இன்று ஆட்சிக்கு வந்தவுடன் அந்த வேலைகளை

அவரே செய்யலாமா? நியாயமா? தர்மமா? மனிதாபிமான செயலா? யோசித்துபாருங்கள். பேசியவர் இன்று அதே வேலையை செய்தால், எப்படி என்ற கருத்தைத்தான் தங்கள்முன் வைக்கின்றோம் என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், எல்லாம் சரியாக இருந்திருந்தால் நாங்கள் பேசியிருக்கமாட்டோம் என்றும், ஆனால் இங்கு பேச வேண்டிய தேவையும் அவசியமும் வந்து விடுகிறது என்றும் கூறினார். குவாரிகளைப் பொறுத்தவரை ஒரு குவாரி இயங்கத் தொடங்கும்போது கம்பிவேலி அமைக்கவேண்டும். கம்பிவேலி அமைக்காவிட்டால் CTO என்கின்ற Consent to Operate மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்காது. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம் EC கொடுத்து விடுவார்கள். ஆனால் மாசு கட்டுப்பாட்டு வாரியம் கம்பிவேலி, எல்லைக்கோடு, பெயர்ப்பலகை, பசுமை அரண், இதெல்லாம் அமைந்துள்ளதா என்று பார்த்து இசைவாணை வழங்கவேண்டும். இப்பொழுது புதிதாக தொடங்கும் குவாரி மற்ற நான்கு குவாரியும் ரோட்டின் மேல் இருக்கின்றது. அதில் பார்க்கும்பொழுது, எந்த கல்குவாரியும் கம்பிவேலி அமைக்கவில்லை. மரியாதைக்குரிய மாவட்ட வருவாய் அலுவர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் தங்களுடைய பதவியை பயன்படுத்தி சட்டவிரோதமாக பலகோடி ரூபாய் கற்கள் வெட்டி எடுத்ததை அழுத்தம் கொடுத்த குவாரிகளில் கூட இன்றுவரை கம்பிவேலி கிடையாது. பசுமை அரண் கிடையாது. பலமுறை சொல்லி இருக்கிறோம். நம்ம மாவட்டத்தில் ஆறுகளை ஆறுமுகசாமி கொள்ளையடித்து மணலை முழுவதும் அள்ளிவிட்டார்கள். குழிமணலாகி ஆற்றுக்குள் குளிக்க கால் வைத்தாலே செத்துவிடுகின்றனர். 10 வருடத்தில் நம்ம கரூர் மாவட்டத்தில் 200 –க்கும் மேற்பட்டோர் பலியாகி இருக்கிறார்கள். அதிகாரிகளின் கூட்டோடு ஆறுமுகசாமி மணல் கொள்ளையால் எத்தனைபேர் கொலையாகி இருக்கிறார்கள். நம்ம மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பலமுறை கூறி ஆற்றுக்கரை ஓரங்களில் தடுப்புகள் போடுங்கள். தடுப்புகள் போடுவது என்றால் 1 மீட்டருக்கு 300 ரூபாய்தான். அதனால் போடுங்கள் என்று கூறியுள்ளோம். 40 கிலோமீட்டர் காவிரியாறு நம் கரூர் மாவட்டம் முழுவதும் செல்கிறது. தடுப்புகள் போட்டால் 1 1/4 கோடி ரூபாய் செலவாகும் எத்தனை உயிரை பாதுகாக்கலாம். போன வருடம் மட்டும் 12 பேருக்கு மேல் இறந்திருக்கிறார்கள். புதுக்கோட்டை பள்ளி மாணவி உள்பட 12 பேர் நமது மாவட்டத்தில் பலியாகியுள்ளனர். அன்றாடம் இறப்பு நடக்கிறது. கல்குவாரிகளில் தெரிவதில்லை, கல்குவாரியில் இறந்துவிட்டால் முழுவதும் மூடி மறைக்கப்பட்டு விடுகிறது. அப்படியும் தமிழ்நாடு முழுக்க போன ஆண்டு கணக்கிட்டதில் 67 பேர் இறந்ததாக RTI –ல் கொடுத்திருக்கிறார்கள் என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், அப்பொழுது கம்பிவேலி போடாததன் விளைவுதான், கம்பிவேலி ஏன் போடுவதில்லை ? இப்பொழுது நவமணி புளூமெட்டல் ஏற்கனவே மணி என்பவரிடம் இருந்து 2022 நவம்பர் மாதத்தில் இன்றைய சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய பொறுப்பில் வாங்கியுள்ளார். இதனை, நவமணி மைன்ஸ் ஆவணங்களில் இணைத்துள்ளனர். 01.11.2022 அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினருடைய மகன் பெயரில் குவாரி உள்ளது. அங்கு கம்பிவேலி கிடையாது, கம்பிவேலி மட்டுமின்றி புல எண்.2 –ல் சட்ட விரோதமாக பதியப்பட்டிருக்கிறது. புல எண். 13, 14 –ல் அனுமதி முடிந்த குவாரியை கையிலெடுத்து நவமணி கிரஷரையும் சேர்த்து ஓட்டுகின்றனர். இரத்தினகிரீஸ்வரர் என்று சொல்லக்கூடிய வைகை புளூமெட்டல் கிரஷர் இன்றளவும் ஓடிக்கொண்டிருக்கிறது. மக்கள் கூறுகின்றனர். பகல், இரவு மாறி மாறி ஓட்டுகிறார்கள். அதிகாரபலம் இருப்பதாக இருந்தால் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் என்ன எந்த தவறுகளை வேண்டுமாலும் செய்யலாமா ? என்று கேள்வி எழுப்பினார். இப்பொழுதுதான் பலகோடி அபராதம் போட்டுள்ளனர். ஆனால் இப்பொழுது சென்று பார்த்தாலும் 5 கோடிக்கு அபராதம் போடலாம். ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து கொண்டு இவ்வளவு அட்டூழியங்களைச் செய்ய முடியுமா ? கம்பிவேலி போடாமல் சட்ட விரோதமாக இயங்கிக்கொண்டு தென்புறம் இருக்கக்கூடிய புல எண்.303–ல் ஒரு குவாரி மட்டும் (திரு.ஜெயமணி என்பவர் குவாரி) 05.12.2023 வரை அனுமதி இருக்கிறது என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், அதே புல எண்.30/1A, 30/1B இரத்தனகிரீஸ்வரர் குவாரி இசைவாணை முடிந்துவிட்டது. எனினும் விதிகளை மீறி சட்ட விரோதமாக நடப்பது ஏன் ? குவாரி இயங்கவேண்டும் என்றால் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்க வேண்டும். ஒரு கற்களை கூட வண்டி ஏற்றக்கூடாது. வெடியானது மதியம் 1 to 2 வரை வெடிவைக்க வேண்டும். திட்ட சுருக்க அறிக்கையில் இதனை சொல்லமாட்டார்கள். CER தொகை கொடுக்கிறார்கள் என்றுதான் சொன்னார்கள். நமது கையில் சிறுகனிம விதி புத்தகம் இருக்கிறது. புத்தகத்தில் இதெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். 5 மணிக்கு மேல் குவாரி இயங்கினால் அது திருட்டு குவாரி. 5 மணிக்கு மேல் இருந்தால் சமூக சொத்தைக் கொள்ளையடிப்பது இதுதான். அப்போ, எல்லாக் குவாரியும் இப்படித்தான் உள்ளது. சட்டம் தெரிந்தவர்களே தப்பு செய்யும்போது மற்றவர்களுக்கு சொல்ல வேண்டுமா ? என்றார்.

எனவே இதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக தயவுசெய்து எல்லாக் குவாரிக்கும் எல்லைக் கல் நடசொல்லுங்கள். எல்லைக்கல் இல்லாமல் உள்ளது. எந்தக் குவாரிக்கும் வரைபடம் கிடையாது. கருத்துகேட்பு கூட்டம் முடிந்தவுடன் 10 கிலோமீட்டர் தாங்கள் இருவரும் பார்த்துவிட்டு கரூர் சென்றுவிடலாம், சென்று பாருங்கள் எந்த குவாரியிலாவது வரைபடம் இருக்கிறதா ? என்று கேள்வி எழுப்பினார்.

ஹெல்மட் போடாமல் போனால் 1000/– அபராதம். இது எல்லாம் உயிரோடு விளையாடுகின்ற விஷயம். அப்போ, அதை செய்யுங்கள். ஐயா, இவர் பேசும்போது சொன்னார் ஒவ்வொரு குவாரியும் 500 மரம், 1000 மரம் வைப்பதாக அதில் 800 மரங்கள் எப்படியும் கொண்டுவந்துவிடுவோம் என்று கூறுகிறார்கள். இந்த வருடம் 2022–2023–ல் 2.47 கோடி மரங்களை மக்களுடைய வரிப்பணத்தில் எடுத்து தமிழக அரசு மரம் நடும் வேலையை செய்கிறார்கள். இந்த ஆண்டும் அதேபோல்தான் 2 1/2 கோடி மரங்களை நடுகின்றது. மாசு கட்டுப்பாட்டு வாரியம் இதெல்லாம் வைத்துதான் உறுதி எடுத்துள்ளனர். மக்களுடைய வரிப்பணம் என்பது சாக்கடையா! குடிதண்ணீரா! ரோடோ, ஏதோ ஒன்றில் வரக்கூடிய நான் கட்டக்கூடிய வரிப்பணம். மரம் நடுவதற்காக இப்படி செலவு செய்யப்படுகிறது. நாங்கள் அதைத் தவறாக சொல்லவில்லை. ஏனென்றால் இங்கு பசுமை மண்டலத்தை உருவாக்க வேண்டும். ஆயிரம் மரம் நடுவோம் என்று சொல்கிறார்கள். 1 மரம் கூட கிடையாது 1 நண்பர் சொன்னார் அழகாக மரம் நட்டுள்ளனர் என்று, அது எந்தக் குவாரியில் என்று சொன்னால் பரவாயில்லை. நாங்கள் போட்டோ எடுத்து கொண்டு வந்து வைத்துள்ளோம். எந்த குவாரியிலும் நடவில்லை. அப்போ 1000 மரம் எங்கே ? இந்த வருடத்தில் 3 குவாரிகளுக்கு முடிகிறது. எங்கே மரம் ? தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூட்டிக்கொண்டு வந்து, மாமரத்துப்பட்டியில் 40,000 மரங்கள் நட்டீர்கள். வெள்ளியணைக்குப் பக்கத்தில் இன்று 400 மரம் தான் உள்ளது 30,600 மரத்தை காணவில்லை. தண்ணீர் விட்டால் தானே ஆகும். அமைச்சர் வந்து 40,000 மரம் நட்டார். இருக்கிறது என்னவோ 400 மரங்கள் தான். குவாரிகளில் தான் தண்ணீர் உள்ளது. அவர்கள் மரம் வைக்க வேண்டியது தான். அதை ஏன் அதிகாரிகளால் கேட்க முடியவில்லை என்று கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பல்லடம் வட்டம் ராமகிருஷ்ணா கல்குவாரியில் பசுமை அரண் அமைக்கவில்லை என்பதற்காக அவர் உரிமத்தை இரத்து செய்தார். பசுமை அரண் அமைக்கவில்லை என்பதற்காக குவாரிக்கு கொடுத்த அனுமதியை திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ரத்து செய்தார். ஆனால் இங்கு நிறைய பேசுகிறோம். நிறைய நடக்கிறது காட்டுகிறோம். ஆனால் குவாரிகளில் ஒரு மாற்றம் இல்லையென்பது வடக்கு சிவாயத்தில் மட்டும் இல்லை. கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து 300 குவாரிகளின் கதையும் அதுதான். அரசு, மக்களுக்கா ? குவாரிக்கா ? இந்த அரசு யாருக்கு ? அப்படி என்கிற கேள்வியை முன் வைக்கின்றேன் என்றார். தயவுசெய்து உத்தரவு போடுங்கள் சார் என்றார்.

மரங்கள் வைத்தால்தான் குறிப்பிட்ட உயரம் வளர்ந்த பிறகு தான் குவாரிகள் இயங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இன்று கரூர் மாவட்டத்தில் 3.2 ரிக்டர்

நில அதிர்வு வந்துவிட்டது. கரூர் மாவட்டம் தான் தமிழ்நாட்டிலேயே மிக அதீத வெப்பமான மாவட்டமாக இருக்கிறது. 110 டிகிரி பாரன்ஹீட் இன்று கரூர் மாவட்டம் டி.வியில் கூறுகிறார்கள். கரூர் பரமத்தி, ஈரோடு, வேலூர் மாவட்டம், சென்னை மீனம்பாக்கம் பகுதிகளில் வெப்பம் அதிகம் என்று அப்போ இவ்வளவு வெப்ப பகுதியில் சிக்கியுள்ளது. போன வாரத்தில் முதலமைச்சர் காலநிலை மாற்றம் அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் வனத்துறை அமைச்சகம் மூலம் காலநிலை மாற்றம் தொடர்பான அறிக்கை கொடுத்திருப்பதாக கூறினார். அது என்வென்றால், வெப்பம் அதிகரித்துக் கொண்டே போயிட்டு இருக்கின்றது. இப்படி வெப்பம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போனால் 2050 –ல் சென்னை நகரத்தினுடைய 25 விழுக்காடு பகுதி கடலோடு மூழ்கிவிடும் என்று கூறியதாக தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், பசுமை மண்டலத்தை உயர்த்தினால் தான் சென்னையும், தமிழ்நாடும் தப்பிக்கும். அப்போ அதை சரிசெய்கின்ற பொறுப்பு யாருக்கு ? என்ற கேள்வி எழுப்பினார். அந்த கடமையும் உங்களுடையது. அதை அமுல்படுத்தவேண்டிய கடமை உங்களுடையது. நீங்கள் அதை செய்யுங்கள். அதைத் தவிர வேறு எதையும் கேட்கவில்லை என்றார். சட்டப்படி இல்லாதவற்றை நடவடிக்கை எடுங்கள் இதைத்தான் கேட்கிறோம். கம்பிவேலி அமைக்கவில்லை. பெயர்பலகை வைக்கவில்லை. எல்லைக்கல் நடவில்லை. பசுமை அரண் அமைக்கவில்லை, எதுவும் பண்ணவில்லை. அதுமட்டும் இல்லை ஐயா அவர்களே, புல.எண் 2 புல.எண்.13,14 மற்றும் புல.எண்.30/1A, 30/1B–ல் அமைந்துள்ள மூன்று கல்குவாரிகளிலும் இரவு நேரங்களில் தண்ணீர் திருடப்படுகிறது. கொள்ளையடிக்கப்படுகிறது. கேட்கிறார்கள்! அவரவர் குவாரிகள், அவரவர் பட்டா நிலம், அதிலிருந்து தண்ணீர் எடுத்தால் கொள்ளையா என்று கேட்கிறார்கள் என்றார். ஐயாவிற்கு தெரியாதது எதுவும்மில்லை என்றார். குவாரி என்பது மேற்பரப்பு இடம் மட்டும்தான் உரிமையாளருக்கு சொந்தம். மண்ணிற்கு கீழே உள்ளது எல்லாம் அரசிற்கு சொந்தம். அதனால் தான் குவாரியின் ஒப்பந்தக்காரர் என்று குறிப்பிடுகிறார்கள். குவாரி குத்தகைக்கு தான் கொடுக்கப்படுகிறது. யாருமே குவாரிக்கு சொந்தக்காரர்கள் அல்ல. குவாரியின் குத்தகைதாரர்தான் குவாரியின் உரிமையாளர் என்று சொல்வது தவறு என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், குவாரி குத்தகைதாரர்தான் அந்தக் குத்தகைக்காரர்களின் சர்குலரில் தெளிவாக சொல்லுகிறது. என்னவென்றால் குவாரி அனுமதி முடிந்தால் குவாரியை சுற்றி கம்பிவேலி அமைத்து அடைத்துவிடவேண்டும். அப்போ தண்ணீர் எடுக்க வேண்டும் என்றால் நம்ம கலெக்டர், மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி கொடுக்க முடியுமா ? என்றால் முடியாது என்றார். தலைமை செயலகம் போய்தான் தண்ணீர் எடுக்க அனுமதி வாங்க முடியும், ஆனால் அப்படி வாங்காமல் இன்று தினசரியும் பலகோடி லிட்டர் தண்ணீர் பழனியாண்டி அவர்களுடைய புல எண். 2 –ல், பழனியாண்டி மகன்

அவர்களுடைய வடக்கு புலத்தில் இருக்கக்கூடிய B 14 –ல் இங்கே இருக்கக்கூடிய 30/1A,30/1B குவாரியில் இருந்து கிரஷர் எம்–சேண்டுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். உடனே நிறுத்த சொல்லி உத்தரவிடச் சொல்லுங்கள் சார். போனவாரமும் சொன்னேன். ஏனென்றால் மழைதண்ணீர் இல்லாமல் தான் விவசாயம் அழிந்தது. இவர் சொன்னாரு, அந்தப் பகுதி எல்லாம் விவசாயத்திற்கு உகந்த பகுதி அல்ல என்று சென்று பாருங்கள் குவாரிக்கு வடபுறத்து எல்லை கல் போட்டுள்ளார்கள். புல எண்.2 விவசாயத்திற்கு பயன்படுத்தக் கூடிய பகுதி புல எண்.3 பகுதி விவசாய நிலம் என்று கொடுத்திருக்கிறார். அற்புதமான விவசாயம் செய்யக்கூடிய நிலம் என்று சொல்லி கொடுத்திருக்கிறார். இந்தப்புல எண் வடபுறத்தில் கரும்பு சாகுபடி செய்துள்ளார். தென்புறம் மக்காச்சோளம் போட்டுள்ளார். இந்த கோடைகாலத்திலும் (திட்டவடிவமைப்பாளர் கூறியுள்ளார்). 31 கிணறுகள் இந்த குவாரியை சுற்றி உள்ளது என்று. புல.எண் 15 அனுமதி கேட்டுள்ள குவாரியின் ஆழம் 38 மீட்டர் என்றால் கிட்டத்தட்ட 110 அடி ஆழம் வெட்டப்பட உள்ளதாக சொல்கிறார்கள். அப்படி வெட்டும்பொழுது சுற்றியுள்ள 31 கிணறுகளின் நிலைமை என்னாவது ? என வினவினார். ஏற்கனவே குவாரி வெட்டப்பட்டதால் இன்று கிணறுகளின் பாசனம் என்னவாயிற்று என்பதற்கான அறிக்கை கிடையாது. பார்த்தவுடன் திட்ட அறிக்கையில் 31 கிணறுகள் இருக்கிறது என்று போட்டுவிட்டார்கள். 31 கிணறுகளுடைய நீர் நிலை என்னவாக இருக்கும் எந்தவிதமான அறிக்கையும் இதில் கிடையாது நமக்கு தெரியும் தண்ணீர் மேட்டில இருந்து பள்ளத்துக்குப் போகும். இப்படி குவாரி வெட்டுனா இந்த மேட்டுல இருக்குற தண்ணீரூராவும் பள்ளத்துக்கு போய்விடும். அப்ப குடிக்கிறதுக்கு தண்ணீக்கு எங்கு போவது விவசாயத்திற்கு எங்கு போவது என்றார்.

மேலும் இவர் ஒரு பச்சை துண்டு போட்டு இருக்கிறார். விவசாயத்தில் தான் இருக்கிறார். வேளாளண் தொடர்பான கூட்டங்களில் அவரும் எங்களுடன் வந்து கலந்து கொண்டுள்ளார். அப்போ விவசாயத்தை அழித்து கல்குவாரியா ? கல்லும் எடுக்க வேண்டாம் என்கிறீர்கள். மணலும் எடுக்க வேண்டாம் என்கிறீர்கள். மணலுக்கு என்ன செய்வது என்று நீங்கள் எங்களை கேட்கலாம். நாங்களெல்லாம் வீடு கட்ட வேண்டாமா ? எங்களுக்கு எளிய வழியில் மணல் கிடைக்குமா ? நான் சொல்லவில்லை தமிழக முதல்வர் 2017 –ல் காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம் ஒரு கோரிக்கை வைத்தது. அந்த கோரிக்கை என்னவென்றால் மணல்குவாரிகளை மூடினால் வெளிநாட்டில் இருந்து இயற்கை ஆற்றுமணலை இறக்குமதி செய்யலாம். தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை அணைகளும் கட்டப்பட்டதில் இருந்து தூர்வாரவில்லை. தூர்வாரினால் தமிழகத்திற்கு தேவைப்படும் மணலை அதிகமாக மணல் கிடைக்கும் என்று கூறினோம். அதை தமிழக முதல்வர் அவர்கள் முகனூல் பதிவாக ஆங்கிலத்திலும், தமிழிலும் போட்டுள்ளார். ஏற்கனவே 2017 –ல் மணல் குவாரி எல்லாம் நிறுத்தப்பட்ட போது தமிழக அரசு

5,00,000 மெட்ரிக் டன் வெளிநாட்டில் இருந்து இயற்கை ஆற்றுமண் இறக்குமதி செய்யுங்கள் என்று அரசாணை போட்டது. இப்பொழுது திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்த பிறகும் 2022–ல் 6 –ம் மாதம் வரை அந்த அரசாணை இருந்தது. இன்னுமொரு கோரிக்கை வெளிநாடுகலிருந்து மாதம் 15,00,000 மெட்ரிக் டன் இயற்கை ஆற்று மணல் இறக்குமதி பண்ணுங்கள். சுனாமி, நிலநடுக்கம் வரக்கூடிய பகுதியில் ஆற்றில் உள்ள மணல்களை அப்புறப்படுத்த வேண்டும். அங்கு மரங்களை வைத்துதான் வீடுகட்டுகிறார்கள்.

மேலும், காமராஜர் துறைமுகம், சென்னை என்னூர் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி துறைமுகத்தில் தினமும் 1000 ரூபாய்க்கு இறக்குமதி செய்து கொடுப்பதற்கு நூற்றுக்கனக்கான நிறுவனங்கள் தயாராக இருக்கிறது. இதையே தான் தமிழ்நாடு சுற்றுச்சூழல் இயக்கம் மட்டுமில்லை, காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம் மட்டுமில்லை, சட்டவிரோத கல்குவாரி, தமிழக பொதுப்பணித் துறையில் ஓய்வு பெற்ற சூப்பிரடண்ட், தலைமைப் பொறியாளராக, சீப் இன்ஜினியராக இருந்த அசோக் என்பவர்தான் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். பிரச்சனை என்னது வெளிநாட்டில் இருந்து இந்த எம் சேண்ட் வாங்குனா டன் 4000 ரூபாய். All India டிரான்ஸ்போர்ட் சார்ஜ்தான் இந்த அளவுகூட வராது. இன்னைக்கு எம்சேண்ட் வாங்குவது கடினமாக இருக்கிறது என்று சான்று கொடுக்க ஒருத்தர் இருக்காங்களா? தமிழ்நாட்டில் நாங்களும் 2 வருடமாக கரடியாக கத்துகிறோம். ஊருக்குள் கொரோனா வந்ததும் லேப் வைத்தீர்கள், இரத்தம் மாதிரி பார்க்க லேப் வைத்தீர்கள். வீடு கட்டுகிறோம் நடுத்தர குடும்பத்தினரை வசிப்பவர்கள் 1 கோடி ரூபாய் வீடு கட்டுகிறோம். இந்த வீடு கட்டக் கூடிய மணல் தரமானதா, நாங்கள் 40000 ரூபாய் கொடுத்து வாங்குவதாக கூறினார். ஆயிரம் ரூபாய் டெஸ்ட்க்கு கொடுத்து வாங்க சொன்னா அப்படி ஒரு லேப் கொண்டுவாருங்கள் என்று சொன்னால் செய்ய மாட்டீங்கிறார்கள்? சென்னையில் கட்டப்பட்ட கட்டிடம் கட்டுவதற்கு முன்னாடியே கையால் தொட்டால் உதிர்ந்துவிடும். இன்னைக்கு அதனை இழுத்து மூடி உள்ளார்கள். நான் கேட்பது 50 சதவீதம் எம்–சேண்டில் கழிவு மணலை கலக்கிறார்கள். எம்சேண்ட் உரிமையாளர்களிடமிருந்து எங்களுக்கு ரெக்கார்டு ஆகியிருக்கிறது. 30 சதவீதம், 50 சதவீதம் கழிவுமணல் இன்னைக்கு சிமெண்ட்டாலே கட்டப்படக்கூடிய கட்டடம் கிட்டத்தட்ட 80 ஆண்டுகளுக்கு வாழ்க்கை தரும் என்று கூறினார்.

மேலும், இன்றைக்கு வருடத்தில் கரூர் பேருந்து நிலையம் இடித்துக் கொண்டு உள்ளார்கள். ஆனால் எம்–சேண்டை வைத்துக் கட்டப்படுகின்ற கட்டிடம் எல்லாம் 20 வருடம் கூட தாங்காது அதுதான் நிலை அதில் கலப்படம், கமிஷன், மக்கள் கட்டக்கூடிய வீடுகளும் இந்த நிலையில் தான் இருக்கும். வரும் முன்னால் காப்போம் என்கிறோம். என்னன்னா சாக்குபோக்கு சொல்கிறோம். அதை சரிசெய்ய வேண்டிய பொறுப்பு கடமை அரசுக்கு இருக்கிறது. எனவே

நீங்கள் தயவு செய்து எம்–சேண்டும் வேண்டாம், ஆற்றுமணலும் வேண்டாம். 1 வருடமாக ஆற்றில் மணல் அள்ளவில்லை காவிரி ஆற்றில் மிகஅதிகமான மருத்துவக் கழிவுகள் கலந்து இருக்கிறது என்று IIT, சென்னை ஆய்வுசெய்து அறிக்கை கொடுத்துள்ளார்கள். அய்யா இந்தக் கழிவை எங்களுக்கு திறந்துவிடாதீர்கள் என்று சொல்லி தலைமைச் செயலாளர் அவர்களிடம் மனு கொடுத்துக் கொண்டிருக்கிறார். கர்நாடகத்திற்கு, கர்நாடகத்திலிருந்து வருவது தண்ணீர் என்று நினைக்கிறோம். ஆனால் கர்நாடகத்தில் இருந்து வருவது பெங்களூர் மொத்தக் கழிவுநீர் தான். மெட்ராஸ் பகுதி கழிவுநீரால் மாசடைந்த பகுதி என்று நினைத்து கொண்டிருக்கிறோம். ஆனால் பெங்களூர் கழிவுநீர் மேட்டூரிலிருந்து ஜேடர்பாளையம் வரைக்கும் ஒரு கைப்பிடி மணல் கிடையாது முழுக்க பாறைதான் அந்த நீர் எந்த சுத்திகரிப்பும் இல்லாமல்தான் வருகிறது. காவிரி ஆற்றில் மணல் சுத்திகரிப்பு, நொய்யல், பவானி ஆறு, அமராவதி ஆறு எல்லாமே நாசமாக போய்விட்டது. ஆற்றில் தண்ணீர் வேண்டுமானால் வரும் மணல் வராது. இப்படியாக அபாயகரமாக இருக்கிறது. நாம் எதிர்காலத்துக்கு சொத்து சேர்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னைக்கு ஈரோடு மாவட்டத்தில் குடும்பத்தில் ஒருவருக்கு கேன்சர், குடும்பத்தில் ஒருவருக்கு மலட்டுத்தன்மை. கரூர் மாவட்டம் மாறிபோய்விட்டது. இந்த தண்ணீர் தொடர்ந்து பயன்படுத்தினால் உங்களுக்கும் கேன்சர், தைராய்டு, தோல்நோய், மற்றும் சிறுநீரக பாதிப்பு, மலட்டுத்தன்மை ஏற்படும் என்று IIT அறிக்கை வெளியிட்டுள்ளது. இதற்கு யார் பொறுப்பு? அரசாங்கம் தான், அதிகாரிகள் தான் பொறுப்பு. மாற்று வழி சொல்கிறோம், அதைச்செய்யுங்கள், தேர்தல் நேரத்தில் மட்டும் செயல்படக்கூடாது. ஒரு பொறுப்புள்ள அரசியல்வாதி எப்பொழுதும் மக்களுக்காக உழைக்கவேண்டும்.

மேலும் அவர் கூறுகையில், இன்றைக்கு நடைபெறுகின்ற போராட்டங்களில் கூடங்குளம் அணுஉலை, ஸ்டெர்லைட், ஹைட்ரோ கார்பன், மணல் கொள்ளையாக இருக்கலாம். நாங்கள் எல்லாத்துக்கும் தீர்வு சொல்கிறோம். தயவு செய்து கடந்த ஆட்சியின் கீழே மக்கள் கொண்ட அவநம்பிக்கை அதிகாரத்தை மாற்றி நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும். நேர்மையாக இருக்க வேண்டும். செயற்கை ஆற்றுமணலை இறக்குமதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் இங்கு பதிவு செய்கிறோம் என்று கூறினார்.

மேலும், அதற்கு அடுத்தபடியாக, நண்பர் ஒருவர் 5,00,000 ரூபாய் எங்க ஊர் கோவில் கட்டுவதற்கு பணம் கொடுத்தார்கள் என்று கூறினார். கிராமப்புற ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 20 டன்னுக்கு மேல் லாரி போகக்கூடாது. இப்படி நான் சொல்லவில்லை RDO அலுவலகம் சென்றால் முன்னாடியே பலகை வைக்கப்பட்டிருக்கும். அதேபோல தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட நெடுஞ்சாலைகள் இதர மாவட்ட சாலைகள் 6 டயர் வாகனம், 16 டன், 10 டயர் லாரி சென்றால் 26 டன், 18 டயர் லாரி சென்றால் 36 டன் மற்றும் 48 டன்தான்

ஏற்றி செல்ல வேண்டும். ஆனால் கிராமப்புறசாலைகளில் 10 வீல் டிப்பர் 50 டன், 60 டன் ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள். 1 சாலைப் பாதிப்பு அடைந்தால் 1 கோடி ரூபாய் அரசு செலவு செய்கிறது. நீங்கள் 5 லட்சரூபாய் கொடுப்பதை பெரியதாக சொல்கிறார்கள். இந்தக் குவாரி இயங்குவதற்காக எவ்வளவு நன்கொடை அளிப்பார்கள்? என கேள்வி எழுப்பினார். குடிதண்ணீர், சுகாதாரம், மருந்துகளை மக்களின் வரிப்பணம் மூலம் குவாரிகளுக்கு பலஆயிரம் கோடி ரூபாய் செலவில் சாலை அமைக்கப்படுகிறது. 9000 கல்குவாரி இருக்கிறது என்று சொன்னால் ஆண்டு 1-க்கு இந்தக் கல்குவாரிகளுக்காக செலவு செய்யப்படும் சாலைகளுக்கான தொகை மட்டும் 15 ஆயிரம் கோடி ரூபாய் அப்ப என்ன நியாயம் இருக்கிறது? என்ன அறம் இருக்கிறது? என்ற கேள்வியை முன் வைத்தார்.

மேலும், ஏழைங்க வரிப்பணத்தை எடுத்து கல்குவாரிக்காக பெரிதாக கொடுத்தா நான் சாப்பிடுகிறேன், தீபெட்டி 1 வாங்கினாலும் கூட GST 18 பைசா கட்டுகிறோம். 35 சதவீதம் வரி கட்டுறேன். நான் சாப்பிடுகிற சாப்பாடு ஓட்டல்களில், 2 சதவீதம் GST கட்டுகிறோம். இவ்வளவு பெரிய விசயமாகக் கூறி காட்டக்கூடிய நிலை இருக்கிறது. மக்களுடைய காசு எப்படி போயிக்கொண்டிருக்கிறது. என்காசு, உன்காசு இல்ல மொத்தமாக இங்க இருக்கக் கூடிய DRO காசு, DEE காசு, எல்லாத்துடைய காசும் தனிக் குவாரி உரிமையாளர்களுக்கு போய்கொண்டிருக்கிறது. அப்படியென்றால் இவர்கள் மக்களுக்கு செய்வதில் என்ன இருக்கிறது. எந்தக் கல்குவாரி மதியம் 1 மணி முதல் 2 மணி வரை வெடி வைக்கிறார்கள், சத்தமே இல்லாமல் , கொள்ளுப்பட்டாசு வெடிக்கரமாதிரி வானவெடி, அதுவும் ஒரு வெடி வெடித்தால் இன்னொரு வெடி 28 செகண்ட் யாராச்சும் வீட்டுல இப்படி சவுண்ட் கேட்டிருக்கிறீர்களா? வெடிச்சா குழந்தைகலெல்லாம் அலண்டு விடுவார்கள். எத்தனை ஆடு, மாடுகளுக்கு இந்தப் பிரச்சனை வருகிறது. அதுதானே உண்மை. எத்தனை குவாரிகளில் விபத்து நடந்து மருத்துவமனைக்கு கூட்டிச் செல்கிறோம். அப்போ சட்டம் என்பது வெறும் காகிதமா? அந்தக் குவாரிகளில் இன்று மதியம் 2 மணிக்கு சென்று பாருங்கள். 1 to 2 வெடி வைக்கிறார்கள் அதுவும் நாணல் வெடி கிடையாது என்று கூறினார். சட்டத்தை மதித்து என்ன பண்ணுவது? சாதாரண ஒரு விவசாயி தவறு செய்தால் தூக்கில் போடுவேன் என்கிறார்கள். இத்தனை குற்றங்கள் செய்தவர்கள் மேல் என்ன நடவடிக்கை? என்று கேள்வியை வினவினார். சட்ட விரோத வெடிமருந்து பயன்படுத்திவிட்டு நாணல் வெடி வாங்குகிறோம் என்று சொல்லவேண்டியது. ஆனால் வாங்குகிற வெடி சட்டவிரோத வெடிமருந்து. அப்போ எந்த வெடிமருந்து ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும். அதுதானே சரி. இதே வெடிமருந்து குவாரியைத் தாண்டி வேறுபக்கம் சென்றால் என்ன நிலைமையாகும்? என்ற கேள்வியை எழுப்பினார். எனவே நீங்கள் இதுபோன்றவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து கொள்வேண்டும் என்றார்.

அடுத்ததாக, அய்யர்மலையில் ரோப்கார் அமைகின்ற திட்டம் பல ஆண்டுகளாகவே இருக்கிறது. நாங்கள் விசாரித்த வகையில் கல்குவாரி உரிமையாளர்கள் அப்ஜெக்ஸன், அங்கு வந்த பல அரசு அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பதால் இந்த ரோப் கார் அமைக்கும் திட்டம் இல்லை என்று கூறினார். ஆனால் ரோப் கார் அமைந்தால் அங்கு எம்–சேன்ட் புகை, கிரஷர் புகை இங்குவரும் என்றும், ரோப்காருக்கும் பாதிப்பு வரும் அவர்களுடைய அழுத்தத்தால் திட்டம் வராமல் இருப்பதற்கான காரணம் இது தான் என்று கூறினார். ஐய்யர்மலையில் கல்குவாரி உரிமையாளர்கள், குறிப்பாக ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினரும் அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களும் நேரடிடையாக நான் பகிரங்கமாக குற்றம் சொல்கிறேன் என்று தனது குற்றச்சாட்டை முன் வைத்தார். அப்போ அரசு இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அய்யர்மலையில் ரோப்கார் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன் என்றார். அதேபோல திட்ட அறிவிப்பாளர் ஒன்று கூறியுள்ளார் எனவும், இந்தக் குவாரியைச் சுற்றி 10 கிலோமீட்டர் தூரத்திற்கு மலையே இல்லை என்று கூறியுள்ளார். குவாரியை ஒட்டி 400 மீட்டர் தொலைவில் அய்யர்மலை உள்ளது எனவும், அய்யர்மலை மலையே இல்லையா எனவும் கேள்வி எழுப்பினார். நீங்கள் மலை என்று சொல்வதற்கு என்ன அடையாளம் வைத்துள்ளீர்கள் என்று தெரியவில்லை என வினவினார். அடிக்கடி கூறியுள்ளீர்கள். 10 கிலோமீட்டர் சுற்றளவிற்கு மலையே இல்லை என்றும், அப்போ இருக்கக்கூடிய மலையை இல்லை என்று சொல்வதில் 2 விஷயங்கள் இருக்கலாம் என்றார். அந்தமலை இருக்கலாம்! இல்லாமலும் இருக்கலாம்! என்று சொல்வதாகவும் கூறினார். மலை ஆவணங்களில் இருந்தால்தான் கேட்போம் என்றார். அதுக்கு நான்கு வெடிவைத்து எடுத்துச் சென்றாலும் சென்றுவிடுவார்கள் என்றார். அதற்காக தெரியும் ஒரு மலை கண்முன்னால் இருக்கும்போது 10 கிலோமீட்டர் சுற்றி மலையில்லை என்று சொல்லுகிறார்கள் என்றால் இது என்ன நோக்கம்? என்ற கேள்வியை முன்வைத்தார். ஏனென்றால், சரியாக இருந்தால் பாராட்டுவோம். தவறாக இருந்தால் சுட்டிக்காட்டும் இடத்தில் இருக்கிறோம். அதற்கான பொறுப்பும், கடமையும் உள்ளது என்றார். 10 கிலோமீட்டர் சுற்றளவில் தொல்லியல் சின்னம் இல்லை என்று கூறினார்கள். ஆனால் இப்போது காண்பித்த பவர்பாயிண்ட் பிரஷன்டேஷனில் சமணசிற்பம் 3.7 கிலோ மீட்டரில் தூரத்தில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். குண்டாறு அங்கு ஓடுவதாக கூறியுள்ளனர். இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டம் குடுமியாண் மலையில் அங்கு சமணப்படுகை இருக்கிறது என்றும், குகை குடவரைக்கோவில் இருக்கிறது என்றும் கூறினார். அதனாலேயே அங்கு சுற்றியுள்ள 3, 4 கிலோமீட்டர் தூரத்தில் கல்குவாரி அமைப்பதில்லை. ஏனென்றால் தொல்லியல் துறை அங்கு சென்று பார்த்து அனுமதி மறுத்துள்ளனர். எனவே இந்த ஒரு காரணத்தை வைத்து அரசைப் பொறுத்தவரையில் 300 மீ தான் சொல்லுகிறார்கள், தொல்லியல் சின்னம்

சமணப்படுகை இதுபோன்ற படுகைகள், குடவரைகோயில் இருக்கின்ற இடங்களில் குறைந்தபட்சம் 5 கிலோமீட்டர் வரை அனுமதி கொடுக்க கூடாது என்பதை ஆலோசித்து பரிந்துரை செய்ய வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம் என்று கூறினார். எத்தனைகோடி கொடுத்தாலும் உருவாக்க முடியாதது. எனவே இங்கே சமணப்படுகை இருப்பதனால், இந்த குவாரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம். அதேபோல் இங்கு நாம் சொன்னால் எண்ணற்ற பிரச்சனைகளை நாம் சொல்ல முடியும். ஆனாலும் கூட இங்கு அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகள் 200 மீட்டரில் உள்ளது. அதேமாதிரி அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் புல.எண்.6 மற்றும் 29,241 அதேபோல 300மீ, 500மீ சுற்றளவுக்குள் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி புல எண்.6 கிழக்குபுறம் புலஎண்.17ல் வந்து நீர் எடுக்கின்ற நிலையம் உள்ளது. அதேபோல குவாரி வழியாக நீரோடையை காட்டாமல் மறைத்திருக்கிறார்கள். எனவே, 50 மீட்டர் (125 அடி) தொலைவில் ஓடை இருந்தால், குவாரி அமைக்கக்கூடாது. இப்படியாக விதிமுறைகள் உள்ளது. இதைத்தான் விவாதத்தில் எடுத்துப்பார்கள் என்றார். 1000 பேர் குவாரி வேணும் என்று கூறினாலும் அரசு எடுத்துக்கொள்வது கனிம விதியின் அடிப்படையில்தான். எந்தவிதத் தகுதியும் இல்லை என்பது மட்டுமில்லை. சட்ட விரோதமானது இது அமைந்தால் சமூகத்தில் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும். இங்கே இருக்கக்கூடிய தொல்லியல் சின்னங்களெல்லாம் பாதிக்கப்படும் என்று கூறி இன்னொரு செய்தியை தாழ்மையாக முன்வைக்கிறேன். 16.11.2020 தமிழக முதலமைச்சர் ஒரு பத்திரிக்கை செய்தியில் சொல்கிறார். அரசு சம்பளம் வாங்குபவர் அப்படி அரசு சம்பளம் வாங்குகின்றவர் அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எக்காரணம் கொண்டும் அரசு ஒப்பந்தங்களோ, அரசு குவாரிகளோ, நடத்தக்கூடாது என்று நான் சொல்லவில்லை. M.L.A அவர்கள் மகனுடைய பெயரில் குவாரி பணி செய்கிறார். இன்றைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.11.2020–ல் வீரபாண்டி தொகுதி M.L.A சக்கரபாணி மகனுக்கு கல்குவாரி ஒதுக்கீடு செய்ததாக அன்றைய கனிமவளத்துறை அமைச்சர் சி.சண்முகம் ராஜினாமா செய்ய வேண்டும் என்று தமிழக முதல்வர் தெரிவித்திருக்கிறார். முழுக்க முழுக்க அவர் தப்பா தெரியாமல் செய்தது அல்ல. இன்று அதேபோல ஸ்ரீரங்கம் சட்ட மன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய பழனியாண்டி அவருடைய மகன் விமலாதித்தன் என்பவருக்கு குவாரி உரிமை கொடுப்பது சட்டவிரோதமானது, சமூக விரோதமானது, அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது, வீரபாண்டி அண்ணா திராவிட முன்னேற்ற கழக சட்ட மன்ற உறுப்பினர் சக்ரபாணிக்கு ஒரு நீதி ஸ்ரீரங்கம் சட்ட மன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய பழனியாண்டிக்கு ஒரு நீதி, என்று கிடையாது. சட்டம் அனைவருக்கும் ஒன்றுதான். எனவே இந்த அடிப்படையில் இந்தக் குவாரிக்கு எந்த வகையிலும் அனுமதி கொடுக்கக்கூடாது தயவு செய்து தமிழக முதல்வர் அவர்கள் சட்டவிரோதமான இந்தக்

குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டாம் தமிழக அமைச்சர் துரைமுருகன் மீது ராஜினாமா செய்யச் சொல்லி முதல்வர் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வாய்ப்புக்கு நன்றி வணக்கம் என்று கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

மேலும் வேறு யாரேனும் பேச விரும்புகிறீர்களா ? அல்லது எழுத்துப்பூர்வமாக மனு கொடுக்க விரும்புகிறீர்களா ? என்று மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்கள் பார்வையாளர்களிடம் வினவினார். எவரும் பதிலளிக்கவில்லை. கூட்டம் இனிதே முடிவடைந்தது.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர்.